
Price 50 Ps. only

# நற்கருணை வீரன்

இதழ் 54 பிப்ரவரி 2007 எண் 2



குருவின் காலை வெட்டுதல்

*தொன்று தொட்டு நம் முன்னோர்கள் தங்கள் கருத்துக்களையும் அனுபவங்களையும் எடுத்துரைக்க கதைகள், கவிதைகள், சிற்பங்கள், ஓவியங்கள் இவற்றைப் பயன் படுத்தினார்கள். இவற்றில் கதைகளுக்குத் தனிச்சிறப்பு உண்டு. கதைகள் என்றால் அனைவருக்கும் விருப்பம்தானே? கதைகள் மனித இனத்தையொட்டியே அல்லாமல், தேவதைகள், பேய்கள், ஆவிகள், விலங்குகள், மற்ற உயிரினங்கள் பற்றியும் உள்ளன.*

*இந்தக் கதைகளை உருவாக்கியவர்கள் பலர். அவர்கள் யாரென்று நமக்குத் தெரியாது. அவர்கள் சொன்ன கதைகள் வாய்மொழி வழியாக தலைமுறை தலைமுறையாக வந்து கொண்டிருக்கிறது. இவற்றை நாட்டுப்புறக் கதைகள் என்பர். இந்தக் கதைகள் வாய்மொழி வழியாக வருவதால் காலப் போக்கில் மாற்றமடைந்து வருவதும் இயற்கை. நாட்டுப்புறக்கதைகளில் தெனாலிராமன் கதை, பஞ்சதந்திரக் கதை, விக்கிரமாதித்தன் கதை, பரமார்த்த குருவின் கதை போன்றவை சிறப்பானவை. 1710ஆம் ஆண்டு இத்தாலி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த ஜோசப் கான்ஸ்டன்டைன் பெஸ்கி என்னும் இயேசு சபைத் துறவி தமிழகத்தில் தங்கியிருந்து தமிழ்மொழியைக் கற்று இலக்கியங்களில் புலமை பெற்றார். தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அரும்பெரும் தொண்டு செய்தார். பெஸ்கி அவர்களை 'வீரமாமுனிவர்' என்று எல்லாரும் அழைத்தார்கள். இவர்தான் முதன் முதலில் பரமார்த்த குருவின் கதைகளை சேகரித்து அதை ஒரு நூலாக வெளியிட்டார்.*

*பரமார்த்த குருவின் கதைகள் நகைச்சுவை நிறைந்ததாகவும், அதேநேரத்தில், மனித வாழ்வில் காணப்படும் மடமைப் போக்கைச் சுட்டிக்காட்டுவதாகவும் உள்ளன. இந்தக் கதைகளில் சிலவற்றை உங்களுக்குக் கூற நாங்கள் ரெடி. படிக்க நீங்கள் ரெடியா?*

பரமார்த்த குருவுக்கு ஐந்து சீடர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர்கள் என்ன தெரியுமா? மட்டி, மடையன், பேதை, மிலேச்சன், மூடன். இவர்கள் ஐவரும் குருவுடன் சேர்ந்து ஊர் ஊராகச் செல்வது வழக்கம். ஒரு நாள் நீண்ட பயணத்திற்குப் பிறகு, பரமார்த்த குரு மிகவும் களைப்படைந்து கட்டிலில் படுத்துக் கொண்டு தன் கால் கைகளைப் பிடித்துவிடச் சொன்னார். உடனே சீடர்கள் உற்சாகமாக அவருடைய கை, கால், கழுத்து இவற்றை 'மசாஜ்' பண்ணத் தொடங்கினார்கள். குரு அப்படியே அயர்ந்து தூங்கத் தொடங்கினார்.

இதற்கிடையில் மட்டிக்கும் மடையனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. வலதுகாலைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்த மட்டி, "என் கால்தான் அழகாக இருக்கிறது" என்றான். உடனே இடது காலைப்பிடித்துவிட்டுக்கொண்டிருந்த மடையன், "இல்லை... இல்லை... என் கால்தான் உன் காலைவிட அழகாக இருக்கிறது" என்றான். அதைக் கேட்டு மட்டிக்குக் கோபம் வந்து "சும்மா பிதற்றாதே உன் கால் அசிங்கமாக இருக்கிறது" என்று கத்தினான். மடையன், "வாயைமூடுடா மட்டி என் காலையா குறை சொல்கிறாய்! இரு உன் காலை வெட்டி எறிகிறேன்" என்று ஒரு கோடாறியை எடுத்து வந்தான். அதற்குள் மட்டியும் ஒரு கோடாறியை எடுத்து வந்தான். இருவரும் ஒருவர் அடுத்தவர் காலை வெட்டுவதற்குக் கோடாறியை உயர்த்தினார்கள்.

அவர்களின் சத்தத்தைக் கேட்டு குரு திடீரென எழுந்தார்; அவர்கள் கையில் இருந்த கோடாறிகளைப் பார்த்துத் திடுக்கிட்டார். "முட்டாள்களே இந்தக் கால்கள் என்னுடையவை." என்று கோபத்துடன் அவர்களைக் கடிந்து கொண்டார். நல்லவேளை... அவர் சரியான நேரத்தில் கண் விழித்தார். இல்லையென்றால்...!

## தேர்வுக்குப் படிக்க வழிமுறைகள்




பிப்ரவரி வந்துவிட்டாலே போதும்! எல்லாருக்கும் தேர்வு பற்றிய பயம் வந்து விடுகிறது. நேரம் அதிக வேகமாக ஓடுகிறது. இந்த நிலையில் மாணவர்கள் தேர்வுக்காகவே திட்டமிட்டுத் தங்கள் நேரத்தை நல்லமுறையில் பயன்படுத்த வேண்டும். இதோ உங்களுக்கு உதவ சில குறிப்புக்கள்.

01. 'என்னால் தேர்வில் உயர்ந்த வெற்றி பெற முடியும்' என்று அடிக்கடி சொல்லிக் கொள்ளுங்கள். உங்களையே நீங்கள் நம்புங்கள். 02. நீங்களாகவே உங்கள் படிப்புக்கென ஒரு கால அட்டவணையை ஒவ்வொரு நாளுக்கும் தயார் செய்து அதை உறுதியோடு கடைப் பிடியுங்கள். 03. படிக்கும் முன் முகத்தைக் கழுவி, சுறுசுறுப்புடன் அமருங்கள். தேவையான புத்தகங்கள், நோட்டு, பேனா முதலியவற்றை உங்கள் அருகில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் படிக்கும்போது யாரும், எதுவும் இடையூறாக இல்லாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். 04. படிப்பதைப் புரிந்துகொள்ளாமல் குருட்டு மனப்பாடம் செய்யக் கூடாது. படித்துக்கொண்டே எழுதிப்பார்ப்பதும் நல்லது. 05. ஒரு கேள்விக்குத் தயார் செய்த பிறகு, புத்தகத்தை மூடிவிட்டு அதை எழுதிப்பார்க்க வேண்டும். 06. தனியாகப் படிப்பதோடு இருவர் அல்லது மூவர் சேர்ந்து படிப்பதும் நல்லது. புரியாததைத் தெரிந்து கொள்ளவும், கேள்வி கேட்டு பதில் கூறவும் இது உதவும். உங்களுக்குள்ளேயே அவ்வப்போது மாதிரித் தேர்வு நடத்திக்கொள்ளலாம்.

07. முக்கியமான பெயர்கள் வருடங்கள், சூத்திரங்கள், விதிகள், ஒரு சொல் விடை, பொருத்துக போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். 08. அதிக மதிப்பெண்கள் கிடைக்கும் கேள்விகள், அடிக்கடி தேர்வில் கேட்கும் கேள்விகளுக்கு அதிக நேரத்தைப் பயன் படுத்துங்கள். 09. வாரத்திற்கு ஒருமுறையாவது நீங்கள் படித்தவற்றை எல்லாம் திருப்பிப் பார்த்து, சிறப்பாக நினைவில் இறுத்திக்கொள்ளுங்கள். 10. உங்களுக்குப் புரியாதவற்றை உங்கள் ஆசிரியர்களிடம் கேட்கத் தயங்காதீர்கள். அவர்கள் உங்களுக்கு உதவுவதற்காகவே காத்திருக்கிறார்கள். 11. உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். போதுமான ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். 12. இவற்றோடு, கடவுளின் ஆசீரை அடிக்கடி வேண்டி, பக்தியோடு செபம் செய்யுங்கள். கடவுளுக்கு இப்போதே உங்கள் கேள்வித்தாள்கள் எல்லாம் தெரியுமென்பதை மறந்து விடாதீர்கள்.

## சிலுவைப் பயணம்

உரோமைப் பேரரசின் ஆளுநராக இருந்த பிலாத்து, இயேசுவிடம் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. இருப்பினும், பெரும்பான்மை யூதர்களின் அச்சுறுத்தலுக்குப் பயந்து இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொல்லுவதற்கு ஆணையிட்டார். அதைக் கேட்ட யூத மதத் தலைவர்கள் மகிழ்ந்தனர். ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் விடவா போகிறது? மரண தண்டனை




விதிக்கப்பட்டவுடன் போர் வீரர்கள் ஒரு பாரமான சிலுவையைக் கொண்டு வந்து இயேசுவின் தோள்மீது சுமத்தினார்கள். சிலுவையை ஏற்றுக் கொண்ட இயேசுவின் இதயத்தில் கருணையன்பு பொங்கி வழிந்தது. கல்வாரி மலை நோக்கி அடியெடுத்து வைத்தார். சிறிது நேரம்தான் சென்றார். அதற்குள் அவரது கால்கள் தடுமாறின.

சாட்டையடிகளால் அவரது உடல் முழுவதும் காயமாகியிருந்தது. குருதி கொட்டியது. அவரைத் தாகமும் பசியும் வாட்டியெடுத்தன. சிலுவையின் பாரம் அழுத்த அழுத்த காயங்களிலிருந்து இன்னும் அதிகமாக குருதி கொட்டத் தொடங்கியது. தாங்க முடியாத வேதனை. அவரது கண்கள் பஞ்சடைந்தன. தனக்கே தெரியாமல் இயேசு தரைமேல் தடுமாறி விழுந்தார். அவர் மேல் அந்தச் சிலுவையும் விழுந்து அவரின் உடலை நசுக்கிப் பிழிந்தது.

தரையில் விழுந்தபோது அவரது தலையிலிருந்த முள்முடி இன்னும் ஆழமாய் ஊடுருவியதும் நெருப்பிலிட்ட புழுபோல் வேதனைத் தீயில் இயேசு துடித்தார். தரை மேல் இறைமகன் செயலற்றுக் கிடந்தார். நாம் நிறைவாழ்வு பெறவேண்டும் என்பதற்காக இந்த அன்புருவம் பட்ட வேதனைகள் எத்தனை எத்தனையோ! **(தொடரும்)**

# தங்கத் திறவுகோல் (1)


## பொம்மை மாளிகையின் இரகசியம்



ஓர் அழகான பொம்மை மாளிகை. அதன் உள்ளே எத்தனையோ அறைகள். ஒவ்வொரு அறையிலும் விதவிதமான விளையாட்டு பொம்மைகள். சிறுவர் சிறுமியர் அதன் உள்ளே சென்று விட்டால்போதும் – நாள் முழுவதும் விளையாடிக் கொண்டே இருக்கலாம். நேரம் போவதே தெரியாது. சாவிகொடுத்தால் ஓடி வரும் பொம்மைகள், தாவிக் குதித்து நடனமாடும் பொம்மைகள், கைதட்டினால் பாடும் பொம்மைகள். நாம் பேசுவதைத் திருப்பிச் சொல்லும் பொம்மைகள். 'ரிமோட்'டினால் இயங்கும் குதிரை, யானை, குரங்கு பொம்மைகள். அது மட்டுமா? சிறுவர் சிறுமியர் ஏறிச் செல்வதற்கென்று குட்டி கார்கள், விமானங்கள், கப்பல்கள் இப்படி எத்தனையோ!

ஆனால் அந்த மாளிகையின் திறவுகோல் ஒரு பெரியவரிடம் இருக்கும். யாரும் உள்ளே நுழைய முடியாது. உள்ளே நுழைய வேண்டுமென்றால் ஒரு சில நிபந்தனைகள் உண்டு. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றியவர்க்கு மட்டுமே அந்தத் திறவுகோலை அவர் கொடுப்பார்.

ஒருநாள் விமலா என்னும் சிறுமி அந்த பொம்மை மாளிகைக்கு வந்து, அந்த பெரியவரிடம் "ஐயா, எனக்கு உள்ளே நுழைவதற்குத் திறவுகோலைக் கொடுங்கள்" என்று கேட்டாள். அதற்கு அவர் விமலாவின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டி, "நீ நிபந்தனைகளை நிறைவேற்றினாயா கண்ணா?" என்று கேட்டார். "ஓ நிறைவேற்றிவிட்டேனே! இன்று அம்மாவுக்கு உதவி செய்தேன். வீட்டைப் பெருக்கினேன். மேசை நாற்காலிகளைத் துடைத்தேன். பாத்திரங்களைக் கழுவி வைத்தேன்..." என்று கூறிக் கொண்டே திறவுகோலுக்காக கையை நீட்டினாள். ஆனால் அந்தப் பெரியவர் "இது போதாது செல்லம், நீ தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் இந்தச் சாவி உனக்குக் கிடைக்கும்" என்று சொல்லி விமலாவை அனுப்பிவிட்டார். இன்னும் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டே விமலா வீடு திரும்பினாள்.




*(தொடரும்)*

## புனிதர் மரிய வியான்னி



93 தாமே அந்தக் களஞ்சியத்தில் மீதம் இருந்த கோதுமையைக் கூட்டிச் சேர்த்தார். அதில் புனிதர் ரெஜீசின் திருப் பண்டத்தை வைத்தார். தந்தை லா லூவேயில் இருந்த போது இப்புனிதரின் திருத்தலத்திற்கு அடிக்கடி செபிக்க செல்வார். இப்பொழுதும் தன்னுடைய அறைக்குச் செபிக்கச் சென்றார். சிறிது நேரத்தில் "சான் மேரியை அழைத்து இப்போது, களஞ்சியத்தைப் பார்" என்றார். அது பாதி திறந்திருந்தது. சிரமத்துடன் முழுதும் திறந்தவுடன் வேறு வகையான கோதுமை நிரம்பி வழிந்தது.

94 சான் மேரி மிகுந்த மகிழ்ச்சியுடன் ஓடிவந்தாள். "சுவாமி வந்து பாருங்களேன். கோதுமை நிறைய இருக்கிறது" என்றாள். "உண்மையாகவா? என்ன நடந்தது" என்றார் தந்தை. இருவரும் சேமிப்பு அறைக்குச் சென்று பார்த்தபோது களஞ்சியம் நிரம்பி இருந்தது. அந்தப் பழைய உளுத்துப்போன பெட்டி உடையாமல் இருந்ததே அதிசயம்தான்! இறைவனுக்கு நன்றி. அனாதைகள் யாரும் இனி கருணை இல்லத்தை விட்டு போக வேண்டியதில்லை. இறைவனின் அருளால் அவர்களுக்குத் தேவையான உணவு கிடைத்துவிட்டது.





95 ஒவ்வொரு நாளும் தந்தை கருணை இல்லத்திற்குச் செல்வார். அவர்களோடு சேர்ந்து சிறிது உண்பார். அந்த அனாதைச் சிறுமிகளோடு உரையாடுவதில் மிக்க மகிழ்ச்சியடைந்தார். நற்செய்திக் கதைகளையும் புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளையும் அவர்களுக்குச் சொல்லுவார். அதே நேரம் அச் சிறுமிகளைக் கவனித்துக் கொண்ட இளம் பெண்களிடமும் அன்போடு உரையாடி அவர்களுக்கு ஊக்கம் ஊட்டுவார்.

96 அந்தச் சிறுமிகள் எழுத, வாசிக்கக் கற்றனர். அந்தக் காலத்துப் பெண்களுக்குத் தேவையான தொழில்களையும் கற்றனர். துணிகளைப் பழுது பார்க்க, தைக்க, பின்ன, துவைக்க, சமைக்க



என்று பல தொழில்களைக் கற்றனர். சிலர் நூற்கவும் கற்றனர். அதனால் அந்த இல்லத்தை விட்டு வெளியேறும்போது அவர்களுக்குப் பிழைப்புக்கான வேலை கிடைத்தது. அந்த வருமானத்தில் அவர்களது திருமணத்திற்கென சிறிது பணமும், சில நல்ல ஆடைகளும் அவர்களால் சம்பாதிக்க முடிந்தது.

(தொடரும்)


RNI 1316 / 57

26th of every month

Pandianagar S.O.

REGD. TN/SR/DDL-225/2006-2008
Licensed to Post without Prepayment / TN/WPP - 62/SR/2006 - 2008

Edited & Published by Rev.Fr.M.S.Savariraj, S.J., and Printed at St.Mary's Press, Beschi College, P.B.No.90, Dindigul - 624 001, TamilNadu. ✆ (0451) 2432188



## அதிபர் அப்புகைப்படத்தை அவனிடம் காட்டினார்

இரயில் நிலையத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி ஒரு முறை தன் குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டதாகச் சொல்லி விடுமுறை எடுத்தார். அவர் மீண்டும் வேலைக்கு வந்தபொழுது அவருடைய அதிபர் அவரிடம் ஒரு புகைப் படத்தைக் காட்டினார். ஏனெனில், அத் தொழிலாளி, இறுதிச் சடங்கிற்குச் செல்லாமல், நாடகக் குழு ஒன்றில் இருப்பதை புகைப்படம் எடுத்திருந்தார். தன் நடவடிக்கைகளை புகைப்படம் எடுப்ப தாகத் தெரிந்திருந்தால் அத் தொழிலாளி கண்டிப்பாக வேறு விதமாக நடந்திருப்பார்.

நாம் பிறரால் கவனிக்கப் படுகிறோமோ இல்லையோ, எப்பொழுதும் நல்லதையே செய்யவேண்டும். கடவுள் நம்மை எப்பொழுதும் பார்க்கிறார் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நீ எங்கிருந்தாலும், எதைச் செய்தாலும், கடவுள் உன்னைப் பார்க்கிறார். உன் செயல்கள் சொற்கள், எண்ணங்கள் எல்லாம் அவருக்குத் தெரியும். நீ தேர்வில் காப்பியடிப்பது, உன் ஆசிரியருக்குத் தெரியாவிடினும் கடவுளுக்குத் தெரியும். ஒருவர் உன்னிடம் யாசிக்கும்போது அந்நற்செயலை யாரும் பார்க்கவில்லை என்றாலும் கடவுள் அதைப் பார்க்கிறார். மாறாக, நீ பொய் பேசவேண்டுமென்று விரும்புகிறாய் என வைத்துக் கொள்வோம். அச்சோதனையை வென்று, எப்பொழுதும் உண்மையையே பேச உறுதிகொள். யாருக்கும் அதுபற்றித் தெரியாது. ஆனால் கடவுளுக்குத் தெரியும். நீ எதைச் செய்தாலும், எதைச் சொன்னாலும், எதை நினைத்தாலும், கடவுள் அதைப் பார்க்கிறார். ஆகவே கடவுளை மகிழ்ச்சிப்படுத்துவதற்கு எது நல்லது என்று நினைக்கிறாயோ அதையே நீ எப்பொழுதும் செய்.